சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 31.05.2018

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் வைகாசி மாதம் 17–ம் நாள் (மே திங்கள் 31–ம் நாள்:–31.05.2018) வியாழன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12503/2018/ஆர்–1, நாள்.21.05.2018ம் தேதிய சுற்றறிக்கையின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் ஊழியர்கள், அரசுத் துறை மற்றும் அரசு சார்பு துறை பணியாளர்களிடம் தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரித் தொகையில் 25% முதல் 35% மிகாமலும், அரையாண்டுக்கான தொழில்வரித் தொகை ரூ.1250/– மிகாமல் 01.10.2018 (2018–2019 II) முதல் உயர்வு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சியில் ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி தொகையில் 30% உயர்வு செய்து வசூலிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | அரையாண்டு வருவாய் | தற்போது வசூல் செய்யப்படும் தொகை | சீராய்வு செய்யப்படும் சதவிகிதம் | சீராய்வு செய்யப்படும் தொகை |
|---|---|---|---|---|
| 1. | ரூ.21000/– வரை | இல்லை | – | – |
| 2. | ரூ.21001/– முதல் 30000/– வரை | ரூ.130/– | 30% | 169.00 |
| 3. | ரூ.30001/– முதல் 45000/– வரை | ரூ.310/– | 30% | 403.00 |
| 4. | ரூ.45001/– முதல் 60000/– வரை | ரூ.620/– | 30% | 806.00 |
| 5. | ரூ.60001/– முதல் 75000/– வரை | ரூ.930/– | 30% | 1209.00 |
| 6. | ரூ.75001/– முதல் அதற்கு மேல் | ரூ.1220/– | (Not exceed) Rs.1250/- Half Year | 1250.00 |

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அட்டவணையில் வரிசை எண்.6ல் கண்ட இனத்திற்கு மட்டும் சுற்றிக்கையின்படி ரூ.1250/– மேல் உயர்வு செய்ய இயலாத காரணத்தால் மேற்படி வருவாய் இனத்திற்குட்பட்ட வகைக்கு மட்டும் ரூ.30/– உயர்வு செய்து வசூல் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொழில்வரி உயர்வு செய்த விவரத்தினை தினசரி நாளிதழில் வெளியிட்டு ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற்று இறுதி செய்து மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5856/2018/அ1)

**தீர்மான எண், நாள்** **381, நாள்.31.05.2018**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி வளாக கட்டிடத்தில் கட்டப்பட்ட கட்டண கழிப்பறை அருகில் வடக்கு பக்கம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியான இடத்தில் 10x15 அளவு கொண்ட காலியிடத்தில் தரை வாடகை மாத வாடகை அடிப்படையில் அமைத்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920ன்படி பொது ஏல கட்டுப்பாடு விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6550/2015/அ2).

**தீர்மான எண், நாள்** 382, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட காலியிடத்தில் நகர்மன்றத் தீர்மான எண்.428, நாள்.28.09.2015ல் அனுமதிக்கப்பட்டபடி தரைவாடகை அடிப்படையில் கடைகள் அமைத்து நடத்துவதற்கு 18.05.2018ம் தேதி மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும்.

| வ.எண் | கடை எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|
| **அ.பழைய பாளையம் ரோட்டில் நகராட்சி நடுநிலைப்பள்ளி முன்புறம்** | | | |
| 1 | 5 | E.நாகேஸ்வரி க/பெ.ஈஸ்வரன், வ.எண்.22, 51ஏ,காண்ட்ராக்டர் பழனியாண்டி தெரு, கே.கே.குளம், சின்னமனூர் | மாத வாடகை ரூ.400/– |
| | 5 | T.ஈஸ்வரன், வ.எண்.23, 39, ஓடைத் தெரு, கே.கே.குளம், சின்னமனூர் | மாத வாடகை ரூ.330/– |
| **ஆ.அரசு மருத்துவமனை எதிர்புறம்** | | | |
| 1 | 4 | சை.கனவாய் பீர், த/பெ.சையது அப்தாகீர், வ.எண்.3, சாமிகுளம் 2வது தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.400/– |
| | 4 | கா.அப்துல் சமது, த/பெ.காதர்கான், வ.எண்.3, சாமிகுளம் 2வது தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.350/– |
| 2 | 10 | த.ராம்குமார் த/பெ.தங்கவேல், வ.எண்.22, காண்ட்ராக்டர் பழனியாண்டி தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.390/– |
| | 10 | ச.ராஜா த/பெ.சங்கிலி<br>நாட்டாமை மருதமுத்து தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.300/– |

அலுவலகக் குறிப்பு:–
1. **மேற்கண்ட இனங்களுக்கு யாரும் ஏலம் கோர முன்வரலில்லை.**
2. **மேற்கண்ட இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒவ்வொரு கடைக்கும் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2).**

**தீர்மான எண், நாள்** 383, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான ஆட்டிக்கும் இறைச்சி கூடத்திற்கு 2017–2018ம் ஆண்டிற்கு புதுப்பித்தல் தொடர்பாக (Water Act ரூ.3000+Air Act 3000) ரூ.6000/– மட்டும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தேனி அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், மேலும் நிலுவைத் தொகையாக (Water Act 1400+Air Act 1400=2800) ரூ.2800/– மட்டும் செலுத்தக்கோரி மேற்படி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி தொகை ரூ.2800/– மட்டும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–
**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை செலுத்தியதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1112/2009/எச்1).**

**தீர்மான எண், நாள்** 384, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் நில அளவை பிரிவில் நகரமைப்பு ஆய்வர் அவர்களின் அறைக்கு மின்சாரம் இணைப்பானது பழைய அலுவலக கட்டிடத்தில் இருந்து வழங்கப்பட்டு வந்தது. தற்போது பழைய அலுவலக கட்டிடம் இடிக்கப்பட்டுவிட்டதால் புதிய அலுவலக கட்டிடத்தில் இருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வந்த நிலையில் வயர்கள் சேதம் அடைந்து மின்சாரம் சென்றடையா வண்ணம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், தனி மின் இணைப்பு வழங்க கோரி நகர்சார் ஆய்வர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன்படி, பழைய அலுவலக கட்டிடத்தை இடித்ததில், அக்கட்டிடத்தில் இருந்த 3 எண்ணம் மின் மீட்டர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நகர்பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆவற்றில் 1 எண்ணம் மின் இணைப்பினை மறு மின் இணைப்பு பெறும் பொருட்டு போர்டு மற்றும் வயரிங் வேலைகள் செய்ய உத்தேசமாக ரூ.3000/– மற்றும் மறு மின் இணைப்புக் கட்டணம் ரூ.3295/– மற்ற இரண்டு தற்காலிக துண்டிப்பு செய்வதற்கான கட்டணம் ரூ.2630/– ஆக மொத்தம் ரூ.8925/–க்கு (ரூபாய் எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. நகராட்சியில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருந்து கேட்கப்படும் நில அளவை தொடர்பான தகவல்கள், FMB வரைபடம் போன்றவை உடனுக்குடன் தயார் செய்ய வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மின்சாரம் இல்லாததால் போதிய வெளிச்சமின்றி, கோடை காலம் என்பதாலும் அதிக வெப்பமாகவும் உள்ளது. மின் விசிறி இல்லாமல் அறையில் அமர்ந்து Table Work** செய்வது கடினமான சூழலாக உள்ளதால் வரைபடங்கள் வரையவும், சரிபார்க்கவும் இயலாத நிலையில் இருப்பதால் அவரச அவசியம் கருதி மேற்காணும் தொகைக்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியும், வயரிங் மற்றும் போர்டு அமைக்கும் பணிக்கு தேவையான பொருட்கள் விநியோகம் செய்ய உள்ளூர் கடைகளில் விலைப்புள்ளிகள் கோரி குறைவான விலைப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கியும் பணியினை முடித்தவுடன் தொகை வழங்குவதையும் ஏற்கலாம்.

3. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4252/2014/இ2).

தீர்மான எண், நாள் 385, நாள்.31.05.2018

தீர்மானம் **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN60W1755 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு **2018–2019**ம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் தொகையாக ரூ.**36981/–** மட்டும் செலுத்தக் கோரியும், மேலும் TN60Z2921 என்ற டிராக்டர் வாகனத்திற்கு ரூ.**8472/–** மட்டும் செலுத்தக்கோரி, தேனி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.**45453/–** மட்டும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், தேனி அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** 386, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60V8239 என்ற எண்ணுள்ள டிப்பர் லாரிக்கு **2018–2019**ம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் தொகை ரூ.**30380/–** மட்டும் செலுத்தக் கோரி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தேனி அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே ரூ.**30380/–** மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு செலுத்திடலாம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை செலுத்தியதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** 387, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60W1755 என்ற டம்பர் பிளேசர் வாகனத்தில் ஹைட்ராலிக் ஜாக்கி, கிளட்ச் அசம்பிளி பழுதடைந்துள்ளதால் மேற்படி வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலையாக உள்ளது. எனவே பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பழுது பணிகளை, வாகன ஓட்டுனர் திரு.சி.செல்வம் தனது சொந்த செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டுள்ள தொகை ரூ.**8608/–** மட்டும் வழங்கக் கோரி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி தொகை ரூ.**8608/–**ஐ மட்டும் திரு.செல்வம் (ஓட்டுனர்) என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1698/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** 388, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.9

சின்னமனூர் நகராட்சி வார்டு எண்.1ல் உள்ள கருப்பையா தெருவில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கழிவு நீர் கால்வாய் மற்றும் சாலை வசதி செய்து தர வேண்டும் என்று தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்த சூழ்நிலையில் மேற்கண்ட தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட சூழ்நிலையில் மேற்கண்ட தெருக்களில் கழிவு நீர் வசதியுடன் சாலை அமைத்து தர வேண்டும் என தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.8.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1888/2018/இ1).

**தீர்மான எண், நாள்** 389, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.10

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, பள்ளிக்கோட்டைபட்டியில் உள்ள நகராட்சிப் பள்ளியில் உள்ள சத்துணவு கூடத்தின் மேற்கூரையானது பழுதடைந்துள்ளதால் அதை இடித்து விட்டு புதிய மேற்கூரை அமைக்கவும், மேலும் மேற்கண்ட சத்துணவு கூடத்தில் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1937/2018/இ1).**

**தீர்மான எண், நாள்** 390, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.11

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சின்னமனூர் கிராமம், வார்டு –A, பிளாக் எண்.3, நகரளவு எண்.13/3B1 (பழைய சர்வே எண்.504/1B) ல் உள்ள 0.54 ¾ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்திற்கு விவசாய நில உபயோக பயன்பாட்டில் இருந்து வணிக உபயோகத்திற்கு மாற்றம் பொருட்டு திரு.D.ராஜாராம் த/பெ.P.துரைசாமி என்பவர் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்காணும் விவரம் குறித்து பொது மக்கள் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெற விளம்பரம் அறிவிப்பு செய்யும் வகையில் இவ்வலுவலக ந.க.எண்.1738/2018/எப்1, நாள்.22.05.2018ம் தேதிய கடிதத்தின்படி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் ஏதேனும் ஒன்றில் விளம்பரம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது, அதன்படி தினசூரியன் நாளிதலிலும், டிரன்டி மிரர் என்ற ஆங்கில நாளிதழிலும் மேற்காணும் விவரம் 25.05.2018ம் தேதி வெளியிடப்பட்டுள்ளது. எனவே விளம்பரம் செய்தமைக்கு தினசூரியன் நாளிதழுக்கு விளம்பர கட்டணம் ரூ.13860/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. வருவாய் நிதியில் வழங்குவதை ஏற்கலாம்.**<br>**3. ஆங்கில நாளிதழுக்கு கேட்பு பட்டியல் ஏதும் வரப்பெறவில்லை, கேட்பு பட்டியல் வரப்பெற்றவுடன் அத்தொகையினை வழங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1738/2018/எப்1).** |
| **தீர்மான எண், நாள்** | 391, நாள்.31.05.2018 |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

பொருள் எண்.12

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஸ்ரீசிவகாமி அம்மன் உடனுறை பூலாநந்தீஸ்வரர் திருக்கோவில் தேரோட்டத்திற்கு வருகை தரும் அனைவரையும் வருக வருக என சின்னமனூர் நகராட்சியின் சார்பாக வரவேற்கும் பொருட்டு தினகரன் சிறப்பு மலரில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.21000/–ஐ கால் பப்ளிகேசன் (ம) லிமிடெட் மதுரை என்ற நிறுவனம் கேட்டுள்ளனர். எனவே மேற்கண்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1831/2018/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | 392, நாள்.31.05.2018<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| **தீர்மானம்** | |

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஸ்ரீ சிவகாமி அம்மன் உடனுறை பூலாநந்தீஸ்வரர் திருக்கோவில் தேரோட்டத்திற்கு வருகை தரும் அனைவரையும் வருக வருக என சின்னமனூர் நகராட்சியின் சார்பாக வரவேற்கும் பொருட்டு தினமணி திருக்கோவில் தேரோட்ட சிறப்பு மலரில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.8000/–த்தை எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன் (மதுரை) லிமிடெட் நிறுவனம் கேட்டுள்ளனர். எனவே மேற்கண்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1831/2018/இ1).

**தீர்மான எண், நாள்** 393, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளின் விவரங்கள் குறித்து தினபூமி நாளிதலின் தமிழக அரசின் ஓராண்டு சாதனை சிறப்பு மலரில் வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் அலுவலக ந.க.எண்.77/செ.ம.தொ.அ/ 2018 எண்ணிட்ட 06.04.2018ம் தேதிய கடிதத்தில் அனுமதி பெற்றதை தொடர்ந்து திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் தினபூமி நாளிதழில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.21000/–ஐ கேட்டுள்ளனர். எனவே மேற்கண்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1798/2018/இ1)

**தீர்மான எண், நாள்** 394, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சியில் உள்ள ஆக்கிரமிப்புகளை 26.04.2018ம் தேதியன்று அகற்றப்பட்டது. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு JCB இயந்திரம், டிராக்டர் (உழுவை மற்றும் இழுவை) பயன்படுத்தப்பட்டது. மேலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பின்பு மறுநாள் இடிக்கப்பட்ட கட்டிட பொருட்கள் மற்றும் உடைந்த பொருட்கள் போன்றவை அப்புறப்படுத்தியதற்கும் மேற்காணும் இயந்திரங்கள் பயன்படுத்திய வகையில் வாடகை தொகை ரூ.23400/– ஆனது இந்நகராட்சியின் நகரமைப்பு ஆய்வர் அவர்களால் செலவிடப்பட்டுள்ளது. எனவே அவருக்கு மேற்காணும் தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்காணும் தொகை செலவிடப்பட்டுள்ளதை ஏற்கலாம்.
3. வருவாய் மற்றும் மூலதன நிதியில் தொகை வழங்குவதை ஏற்கலாம். (ந.க.எண்.0956/05/எப்1)

**தீர்மான எண், நாள்** 395, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஸ்ரீ சிவகாமி அம்மன் உடனுறை பூலாநந்தீஸ்வரர் திருக்கோவில் சித்திரைத் பெருந்திருவிழா தேரோட்ட திருவிழாவினை முன்னிட்டு சின்னமனூர் நகராட்சியின் சார்பாக தேரோட்டத்திற்கு வரும் பொது மக்களை வரவேற்கும் விதமாக தினமலர் சித்திரை பெருந்திருவிழா தேரோட்ட சிறப்பு மலர் 2018 வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.4000/–த்தை தினமலர் நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்கண்ட செலவினம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1949/2018/இ1).

**தீர்மான எண், நாள்** 396, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN60S2751க்கு சில பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 31.05.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்காணும் விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | AMN மோட்டார்ஸ், கம்பம் | ரூ.14850/– |
| 2. | பரமசிவம் ஆட்டோ கேரேஜ், கம்பம் | ரூ.15100/– |

**அலுவலகக் குறிப்பு:–**
1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் காணும் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2).

**தீர்மான எண், நாள்** 397, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN60W1755 என்ற டம்பர் பிளேசர் வாகனத்தின் டயர்கள் அனைத்தும் தேய்மானம் அடைந்து வாகனத்தை இயக்குவதற்கு கடினமாக உள்ளது. எனவே, பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு 6 எண்ணம் புதிய டயர்கள் வாங்குவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.75000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2136/2018/எச்1)

**தீர்மான எண், நாள்** 398, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகராட்சியில் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும், விலைவாசி பலமடங்கு அதிகமாக உள்ளதாலும், பணியாளர் அமைப்பு செலவினம் மற்றும் குடிநீர் விநியோகம் பராமரிப்பு செலவினம் ஆகியவை பன்மடங்கு உயர்ந்துள்ளதாலும் கீழ்க்காணும் விவரப்படி குடிநீர் கட்டணம் விகிதங்கள் திருத்தி நிர்ணயம் செய்ய சின்னமனூர் நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.380, நாள்.18.05.2018ம் அன்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவற்றில் திருத்தப்படவுள்ள உபவிதிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| குடிநீர் விநியோகம் துணை விதிகள் தற்போதைய நிலை | குடிநீர் விநியோகம் துணை விதிகள் திருத்தம் செய்யப்படவேண்டிய நிலை |
|---|---|
| 12(அ). வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ.4000/–.<br>வீட்டுக் காரியங்களுக்கு உபயோகிக்கப்படும் 1000 லிட்டர் தண்ணீருக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.6/– வீதம் கணக்கீட்டு குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.60/– அதன் விகிதாச்சாரமும் வசூலிக்கப்படும் (அளவு மானியின் பராமரிப்புக் கட்டணம் நீங்கலாக). | 12(அ). வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ.4000/–.<br>உயர்த்தப்படவுள்ள குடிநீர் கட்டணம் குடிநீர் வீட்டுப் பயன்பாடு குழாய் அளவுமானி விகிதம் (Meter Rate)<br>பிரதி மாதம் 10000 லிட்டர் வரை குறைந்த பட்ச மாதக் கட்டணம் ரூ.120/– மாதம் ஒன்றுக்கு.<br><br>10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கு ரூ.12/– வீதம் வசூலிக்கப்பட வேண்டும். |
| 12(ஆ). வீட்டுக்காரியமல்லாத மற்றவகை வணிக காரியங்களுக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ.8000/–.<br>வீட்டுக்காரியமல்லாத மற்றவகை வணிக காரியங்களுக்கு விநியோகிக்கப்படும் 1000 லிட்டர் தண்ணீருக்கு அதன் பாகத்திற்கு ரூ.8/– வீதம் கணக்கிட்டு குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.80/–ம் அதன் விகிதாச்சாரமும் வசூலிக்கப்படும் அளவு மானியின் பராமரிப்புக் கட்டணம் நீங்கலாம். | 12(ஆ). வீட்டுக்காரியமல்லாத மற்றவகை வணிக காரியங்களுக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ.8000/–.<br>குடிநீர் வீட்டுப் பயன்பாடு இல்லாத இனஙகள் அளவுமானி விகிதம் (Meter Rate)<br>பிரதி மாதம் 10000 லிட்டர் வரை குறைந்த பட்ச மாதக் கட்டணம் ரூ.150/– மாதம் ஒன்றுக்கு.<br><br>வணிக காரியஙகளுக்கு 100001 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.30/– வீதம். |
| 12(இ). வீட்டுக் காரியமல்லாத மற்ற தொழிற்சாலை காரியஙகளுக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ.15000/–.<br>வீட்டுக் காரியமல்லாத மற்ற தொழிற்சாலை காரியஙகளுக்கு விநியோகிக்கப்படும் 1000 லிட்டர் தண்ணீருக்கு அல்லது அதன் பாகத்திற்கு குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.150/– அதன் விகிதாச்சாரமும் வசூலிக்கப்படும் (அளவு மானியின் பராமரிப்புக் கட்டணம் நீங்கலாக). | 12(இ). வீட்டுக் காரியமல்லாத மற்ற தொழிற்சாலை காரியஙகளுக்கு இணைப்பு ஒன்றுக்கு வைப்புத் தொகை ரூ.15000/–.<br>தொழிற்சாலை பயன்பாடு அளவுமானி விகிதம் (Meter Rate)<br>பிரதி மாதம் 10000 லிட்டர் வரை குறைந்தபட்ச கட்டணம் ரூ.300/– மாதம் ஒன்றுக்கு.<br>தொழிற்சாலை காரியஙகளுக்கு 10001 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.50/– வீதம் |
| 12(ஈ). – | 12(ஈ). பெரியாற்றிலிருந்து எடுக்கப்படும் குடிநீருக்கு நீர் வரியாக இணைப்பு ஒன்றுக்கு மூன்று மாதஙகளுக்கு ரூ.5/– வீதம் வசூல் செய்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்படும். |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்டவாறு துணை விதிகள் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்ப்பகுதியில் வழஙகப்பட்டுள்ள குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு குடிநீர் கட்டணத்தினை உயர்வு செய்து, வசூல் செய்ய ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ள குடிநீர் விநியோகத் துனை விதிகளை திருத்தம் செய்ய ஆரம்ப நிலை அனுமதி / பொது அனுமதி (General Approval / Priminary Approval) வழங்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** 399, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் வார்டு மறுவரையறை பணிகள், வார்டு மறுவரையறை ஆணையத்தின் வழிகாட்டலின்படி தயார் செய்யப்பட்டது. மேலும் Autocad மூலம் Townmap, Ward Map போன்றவைகள் வரைதல், பிரிண்ட் எடுத்தல், பைண்டிங் செய்தது மற்றும் அவ்வப்போது வரும் மின்னஞ்சல் வழி தகவலின்படி உடனுக்குடன் பிழைகளை சரி செய்து, மீண்டும் வரைபடங்கள் வரைதல் போன்ற பணியின் முக்கியத்துவம் கருதியும், தேர்தல் பணியில் அவசர அவசியம் கருதியும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், ஒப்பந்தப்புள்ளியோ, விலைப்புள்ளிகளோ கோர போதிய காலஅவகாசம் இல்லை. எனவே மேற்காணும் விவரப்படி வார்டு மறுவரையறை பணிக்கு திரு.எஸ்.கார்த்திகேயன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் வேல்டு என்பவரால் ரூ.134550/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) பட்டியல் சமர்ப்பித்துள்ளார். எனவே அவருக்கு மேற்காணும் தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி வார்டு மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், ஒப்பந்தப்புள்ளியோ, விலைப்புள்ளியோ கோர போதிய கால அவகாசம் இல்லை. எனவே மேற்காணும் தொகையை சம்மந்தப்பட்டவருக்கு பட்டியலின்படி தொகை வழங்கலாம் ஒப்புதலுக்கு.
3. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்வதை ஏற்கலாம் (ந.க.எண்.4738/2017/டி1).

**தீர்மான எண், நாள்** 400, நாள்.31.05.2018

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

இந்நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் விநியோகம் செய்ய உபயோகப்படுத்தப்படும் வாயு குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ஒரு வருட காலத்திற்கான உத்தேச செலவினம் ரூ.260400/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபது ஆயிரத்து நாநூறு மட்டும்) நிர்வாக அனுமதி பெரும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.2381/2011/இ2). |
| **தீர்மான எண், நாள்** | 401, நாள்.31.05.2018 |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |